வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 10.06.2026 புதன்கிழமை இதழ் : 155 பக்கங்கள் : 08




## நாட்டின் பொருளாதாரச் சரிவுக்கு ராஜபக்ஷர்களே முழுக் காரணம்!

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க குற்றச்சட்டு



கொழும்பு, ஜூன். 10

இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்ததற்கோ அல்லது சர்வதேச நாணய நிதியத்தை நாடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதற்கோ தற்போதைய அரசாங்கம் பொறுப்பல்ல என்றும், ராஜபக்ஷர்களின் தவறான பொருளாதாரக் கொள்கைகளே இதற்குக் காரணம் என்றும் சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்ற விவாதத்தின்போது உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு பொருளாதார ரீதியாகப் படுகுழியில் தள்ளப்பட்டதற்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதைத் நான் தன்னிச்சையாகக் கூறவில்லை. நாட்டின் உயர் நீதிமன்றமே இதனைத் தீர்ப்பளித்து உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கை நாணய நிதியத்தை நோக்கித் தானாகச் செல்லவில்லை. மாறாகச் செல்லவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

07

## பாட்டு பாடினால் கைது! பேசினால் விசாரணை!!

### சிறீதரன் எம்.பி. சபையில் கேள்வி

யாழ்ப்பாணம், ஜூன். 10

அவசர கால சட்டத்தோடு சேர்ந்த வகையில் நீடிப்பு செய்வதற்கான பிரேரணையை ஜனாதிபதியினால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த சூழலில், இந்த நாட்டிலே பல்வேறுபட்ட துயர நிகழ்வுகளும் துன்பங்களும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஊடாக கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த காலச்சூழல் மிகவும் பயங்கரமானதாக இந்த நாட்டிலே இருக்கின்றது என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குறிப்பாக கடந்த வாரம் யாழ்ப்பாணத்திலே வைத்து கிளிநொச்சி உதயநகர் கிழக்கு பகுதியைச் சேர்ந்த கணேஷ் குமார் சங்கீத்சன் கைது செய்யப்பட்டார்கள். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இந்த நாட்டிலே ஒரு பாடல் பாடியதற்காக, ஒரு காலத்தின் செய்தியை கண்ணாடியாக சொல்லுகின்ற ஒரு கலைஞன்

07

## புலிகள் அமைப்பை ஊக்குவிக்கும் செயற்பாடுகளுக்கு இடம் இல்லை!

### சபையில் நேற்று அறிவித்தது அநுர அரசு



கொழும்பு, ஜூன். 10

விடுதலைப் புலிகள் அமைப்பை ஊக்குவிக்கும் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று பாராளுமன் றத்தில் அறிவித்தார்.

நேற்று சபையில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்-

07

## செம்மணி மனிதப் புதைகுழியில்

## சிறுவர்களின் 8 என்புக்கூடுகள் உட்பட 9 என்புக்கூடுகள் நேற்று மீட்கப்பட்டன!



யாழ்ப்பாணம், ஜூன். 10

செம்மணி மனித புதைகுழியில் இருந்து நேற்றைய தினம் 08 சிறுவர் களின் என்புக்கூட்டுத் தொகுதி கள் உட்பட 09 என்புக்கூட்டுத் தொகுதி கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், ஒரு என்புக்கூட்டின் மேல் இருந்து நாணயக் குற்றி ஒன்றும் சான்று

07

## மகாநாயக்கர்களை சந்தித்தார் சந்திரிகா

கொழும்பு, ஜூன். 10

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கண்டிக்கு விஜயம் செய்து, சியாம் மகா நிக்காயவின் மல்வத்து பீடத்தின் மகா நாயக்கர் திப்பட்டுவாவே சிறீ சித்தார்த்த சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரி பீடத்தின் மகாநாயக்கர் வரகாகொட சிறீ ஞானரதன தேரர்

07

## ஜே.வி.பியினரின் தேர்தல் மேடை பாடல்களுக்கு ஒரு நீதி, கிளிநொச்சி இளைஞருக்கு ஒரு நீதியா?

### சபையில் நாமல் ராஜபக்ஷ கேள்வி

கொழும்பு, ஜூன். 10

மக்கள் விடுதலை முன்னணியின் தேர்தல் மேடைப்பாடல்களுக்கு ஒரு நீதி கிளிநொச்சி இளைஞருக்கு ஒரு நீதி என பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சாடியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டம் தன்னிச்சையாகப் பயன்படுத்தப்படுவதாகக் குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்தில் மக்கள் விடுதலை முன்னணியினர் வட பகுதியில் பிரசாரத்திற்காக விடுதலைப்

07

## என்னைக் கைது செய்ய கோட்டாவுக்கு அறிவுரை வழங்கியவரே சுரேஷ் சாலே!

### சரத் பொன்சேகா குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன். 10

என்னைக் கைது செய்து சிறையில் அடைப்பதற்கான அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கியவர் சாலே (சுரேஷ் சாலே) தான் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மதுப் போத்தலுக்கும் சோற்றுப் பார்சலுக்கும் மற்றும் ஆயிரம் ரூபாய் பணத்துக்கும் சமூக

07

## மாகாண சபைத் தேர்தல் நடந்தால் 9 மாகாணங்களில் பெரமுன ஆட்சி!

### சாந்த பண்டார நம்பிக்கை

கொழும்பு, ஜூன். 10

நாட்டில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய 8 மாகாணங்களில் பொதுஜன பெரமுன தனித்து ஆட்சியமைக்கும் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது-

பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் மத்தியில்

07

## தருமபுரத்தில் மின்சாரம் தாக்கி 23 வயது இளைஞர் உயிரிழப்பு!

கிளிநொச்சி, ஜூன். 10

கிளிநொச்சி-தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குற்பட்ட புன்னைநீராவி நாதன் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள தனியார் கடைச்சல் தொழிலகத்தில் மின்சாரம் தாக்கி 23 வயதான இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று காலை தொழில் புரிந்து கொண்டிருந்த இளைஞர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி நகரைச் சேர்ந்த 23 வயதான சிவகுருநாதன் சாரங்கன் என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

07

## நாணய நிதிய உடன்படிக்கையில் திருத்தம் மேற்கொள்ளவேண்டும்!

### ஹர்ஷ டி சில்வா வலியுறுத்து

கொழும்பு, ஜூன். 10

தேசிய உற்பத்தியாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையில் திருத்தங்களை மேற்கொண்டு மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா பாராளுமன் றத்தில் வலியுறுத்தியுள்ளார்.

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



# சரண குணவர்தனவுக்கு 16 ஆண்டு கடுழிய சிறை!

## கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஜூன். 10

ஊழல் குற்றச்சாட்டில் கையூட்டல் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட நான்கு வழக்குகளில் குற்றவாளியாகக் கண்டறியப்பட்ட சரண குணவர்தனவுக்கு, கொழும்பு மேல் நீதிமன்றம் ஒவ்வொரு வழக்கிலும் தலா நான்கு ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

மேலும் அதே வழக்குகளுக்காக சரண குணவர்தனவுக்கு ரூ. 18 லட்சம் அபராதமும் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சரண குணவர்தனவுக்கு எதிராக இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவினால் தாக்கல் செய்யப் பட்டிருந்த வழக்குகளின் தீர்ப்பை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹாயில் நேற்று அறிவித்தார்.



இதன்போது முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தன குற்றவாளி என அறிவித்த கொழும்பு மேல் நீதிமன்றம், 4 வழக்குகளில் தலா 4 ஆண்டுகள் வீதம் அவருக்கு 16 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டு தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராகப் பணியாற்றிய காலத்தில், அந்த நிறுவனத்திற்கு வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொண்டதன் மூலம் அரசாங்கத்திற்கு நஷ்டத்தை ஏற்படுத்தியதாக, ஊழல் குற்றச்சாட்டின் கீழ் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் சரண குணவர்தனவுக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கை கூடைப்பந்தாட்ட தேசிய அணியில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் மாணவி

யாழ்ப்பாணம், ஜூன். 10

தெற்காசிய நாடுகளுக்கிடை யிலான 18 வயதிற்கு உட்பட பெண்களுக்கான கூடைப்பந் தாட்டப் போட்டியில் இலங்கை தேசிய அணிக்காக யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் கல்லூரி மாணவியான லூட்சி றெஜினஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

தெற்காசிய கூடைப்பந் தாட்டப் போட்டியில் இலங்கை அணியை பிரதிநிதித்துவப்படுத்தி வடமாகாண பாடசாலை மாணவி ஒருவர் தேர்வு செய்யப்பட்டமை இதுவே முதல் முறையாகும்.

இந்த நிலையில் இலங்கை யில் இடம்பெற்ற போட்டியில் இந்தியாவுடன் மோதிய இலங்கை அணி இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டமை குறிப்பி டத்தக்கது.




குறித்த மாணவியின் பயிற்சியாளராக தனுஷ் ராஜசோபனா விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

பணச்சலவை தடுப்பு சட்டமூலம்;

# முக்கிய சரத்துக்களுக்கு விசேட பெரும்பான்மை அவசியமானது

கொழும்பு, ஜூன். 10

பணச்சலவை தடுப்பு திருத்தச் சட்டமூலத்தின் சில சரத்துகளுக்கு விசேட பெரும்பான்மை தேவைப்படுவதைத் தவிர, ஏனைய பகுதிகளை பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்மானத்தை சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

இதன்படி, சட்டமூலத்தின் 14 ஆம் சரத்து (முன்மொழியப்பட்டுள்ள 12ஏ மற்றும் 12 பி பிரிவுகள்) மற்றும் 18 ஆம் சரத்து (முன்மொழியப்பட்டுள்ள 17 ஏ, 17 பி மற்றும் 17 சி பிரிவுகள்) ஆகியவை விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் என நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இருப்பினும், முன்மொழியப்பட்டவாறு இந்தச் சரத்துகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டால், அவற்றை சாதாரண பெரும்பான்மையுடனும் நிறைவேற்ற முடியும் என உயர் நீதிமன்றம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

பணச்சலவை தடுப்பு திருத்தச் சட்டமூலத்திற்கு எதிராக, அரசியலமைப்பின் 121(1) ஆம் பிரிவின் கீழ் உயர் நீதிமன்றத்தில் சவால் விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரயிலுடன் ஓட்டோ மோதி இரண்டு பேர் உயிரிழப்பு


கொழும்பு, ஜூன். 10

சிலாபத்தில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த இரயிலுடன் முச்சக்கரவண்டி மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளதாக இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கட்புவத்தை மற்றும் கந்தானை ஆகிய நிலையங்களுக்கு இடைப்பட்ட ரயில்வே குறுக்குவழியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சுன்னாகம் தெற்கு பகுதியில் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள்



யாழ்ப்பாணம், ஜூன். 10

யாழ்.மாவட்டத்தில் நேற்று தொடக்கம் 12 ஆம் திகதிவரை விசேட டெங்கு கட்டுப்பாட்டுச் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன் ஒரு அங்கமாக யாழ். மாவட்டத்தில் டெங்கு நிலைமை கண்டறியப்பட்ட பிரதேச செயலகங்களில் ஒன்றான உடுவில் பிரதேச செயலகத்தின் சுன்னாகம் தெற்குப் பகுதியில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ஜெயக்குமார் தலைமையில் சுன்னாகம் தெற்கு பகுதியில் உள்ள வீடுகளுக்கு சென்று டெங்கு ஒழிப்பு மற்றும் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

இந்த டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாட்டின்போது டெங்கு பரவும் அபாயத்துடன் காணப்படும் வீட்டு உரிமையாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கையும் வழங்கப்பட்டது.

இந்த டெங்கு ஒழிப்புச் செயற்பாட்டில் வலிகாமம் தெற்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா பிரகாஷ், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.ஜெயக்குமார், தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு உத்தியோகஸ்தர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், உடுவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், வலிகாமம் தெற்கு பிரதேச சபை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# உண்ணாவிரத போராட்டத்தை தொடர்கின்றார் சுரேஷ் சாலே!

கொழும்பு, ஜூன். 10

கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் முன்னாள் அரச புலனாய்வுச் சேவைப் பணிப்பாளர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே, தனது உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்வதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அவரது உறவினர்களும் சட்டத்தரணிகளும் அவரைச் சந்திக்க அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், இதன்போது தான் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடரப் போவதாக அவர் தெரிவித்தார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளரைப் பதவியில் இருந்து நீக்குமாறும், தான் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தை மாற்றுமாறு கோரியுமே சுரேஷ் சாலே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, சுரேஷ் சலே மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவதாகக் கூறி, அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பல எதிர்க்கட்சிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்தப் போராட்டக் களத்தில் நேற்று முன் தினம் இரவு முழுவதும் அரசியல் பிரதிநிதிகளும் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

எத்தகைய தடைகள் ஏற்பட்டாலும் போராட்டம் தொடரும் என பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (அ)

# வயலில் இளைஞரின் சடலம்!

கொழும்பு, ஜூன். 10

அஹங்கம - உடுமுல்லவத்த, திட்டகல்ல பகுதியில் உள்ள ஒரு நெல் வயலில் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் திட்டகல்லவைச் சேர்ந்த 23 வயது இளைஞர் ஆவார்.

சம்பந்தப்பட்ட நபர், தனது நெல் வயலில் வேலை முடித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது, சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்தார் என முதற் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக அஹங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

Eelanadu ஈழநாடு

10.06.2026 புதன்கிழமை

பராபவ வருடம், வைகாசி 27

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**

- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# இந்திய அரசியலில் பிரதமர் மோடியின் சாதனை

இந்தியாவில் ஜனநாயக ரீதியாக மக்களினால் தெரிவுசெய்யப்பட்டு மிகவும் நீண்ட காலமாக தொடர்ச்சியாக பிரதமர் பதவியில் இருந்தவர் என்று ஜவஹர்லால் நேரு படைத்த சாதனையை 62 வருடங்களுக்கு பிறகு தற்போதைய பிரதமர் நரேந்திர மோடி இன்று முறியடிக்கிறார்.

2014 மே 14 ஆம் திகதி முதன் முதலாக பிரதமராகப் பதவியேற்ற மோடி ஜூன் 10 பதவியில் தொடர்ச்சியாக 4,399 நாட்களை நிறைவு செய்கிறார். இந்தியாவின் முதலாவது பொதுத் தேர்தலுக்கு பிறகு 1952 மே 13 ஆம் திகதி முதன் முதலாக பிரதமராக பதவியேற்ற நேரு 1964 மே 27 ஆம் திகதி மரணமடையும் வரை தொடர்ச்சியாக 4, 398 நாட்கள் பதவியில் இருந்து சாதனை படைத்திருந்தார்.

இந்த மைல்கல் மோடியின் அரசியல் வாழ்வில் இன்னொரு வரலாற்று முக்கியத்துவ நிகழ்வையும் குறித்து நிற்கிறது. இடையறாது நீண்டகாலம் தொடர்ச்சியாக பதவியில் இருந்தவர் என்று முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி படைத்த சாதனையை மோடி 2025 ஜூலை 25 ஆம் திகதி முறியடித்திருந்தார். திருமதி காந்தி 1966 ஜனவரி 24 ஆம் திகதி தொடக்கம் 1977 மார்ச் 24 ஆம் திகதி வரை 4,077 நாட்கள் தொடர்ச்சியாக பிரதமராகப் பதவி வகித்தார்.

இந்தியா பெருமளவுக்கு மாற்றத்தைக் கண்டிருக்கும் பின்புலத்தில் மோடியின் இந்த சாதனை நிகழ்ந்திருக்கிறது. சுதந்திரத்துக்கு பின்னரான ஆரம்ப வருடங்களில் நேரு இந்தியாவுக்கு தலைமை தாங்கி வழிநடத்தியபோது அதன் சனத்தொகை சுமார் 34 கோடியாகும். 2014 ஆம் ஆண்டில் மோடி பிரதமராகப் பதவியேற்ற போது நாட்டின் சனத்தொகை 131 கோடி. அதற்கு பின்னர் தற்போது சனத்தொகை 146 கோடிக்கும் அதிகமாக அதிகரித்திருக்கிறது.

இந்தியாவின் முதல் பொதுத்தேர்தலில் (1951 - 52) 53 அரசியல் கட்சிகள் போட்டியிட்ட அதேவேளை, 2014 பொதுத்தேர்தலில் களத்தில் இருந்த கட்சிகளின் எண்ணிக்கை 464 ஆக உயர்ந்தது. 2024 பொதுத் தேர்தர்தலில் அந்த எண்ணிக்கை 744 ஆக உயர்ந்தது. முதலாவது பொதுத்தேர்தலில் இந்திய வாக்காளர்கள் தொகை சுமார் 17 கோடியாக இருந்த அதேவேளை, 2014 பொதுத்தேர்தலில் அந்த தொகை 83 கோடிக்கும் மேலாக அதிகரித்தது.

இரண்டு யுகங்களுக்கும் இடையிலான அரசியல் நிலைவரங்களும் முற்றிலும் மாறுபட்டவை. காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கத்தில் இருந்த அரசியல் பரப்பில் நேரு தலைமை தாங்கியபோது 1952 பொதுத்தேர்தலில் லோக்சபாவின் 489 ஆசனங்களில் 364 ஆசனங்களை காங்கிரஸ் கைப்பற்றியது. ஆனால், அதற்கு முற்றிலும் முரணாக, மோடி இந்தியாவுக்கு தலைமை தாங்கத் தொடங்கிய போது அரசியல் நிலைவரம் போட்டிகள் நிறைந்ததாகவும் பலம் பொருந்திய பிராந்தியக் கட்சிகள் மேலெழுந்து ஆதிக்கம் செலுத்தும் மாநிலங்களைக் கொண்டதாகவும் மாறியிருந்தது.

இரண்டு பதவிக் காலங்களை முழுமையாகவும் அடுத்தடுத்தும் நிறைவு செய்த காங்கிரஸ் கட்சி சாராத முதல் பிரதமர் நேருவுக்கு பிறகு அடுத்தடுத்து மூன்று லோக்சபா தேர்தல்களில் வெற்றிபெற்று மூன்றாவது பதவிக் காலத்திலும் பிரதமராக இருக்கும் அரசியல் தலைவர் என்ற சாதனைகளையும் மோடி தனதாக்கிக் கொண்டார்.


எது எவ்வாறிருந்தாலும், பதவிக்காலங்களை பொறுத்தவரையில் நேருவையும் மோடியையும் ஒப்பிட்டு சாதனைகளைப் பட்டியலிடலாம். ஆனால், கொள்கைகளை பொறுத்தவரை, அவர்கள் இரு துருவங்கள்.

பல்வேறு மதங்களைக் கொண்ட இந்தியாவை ஒன்றிணைத்து வைத்திருப்பதற்கு மதச்சார்பின்மை இன்றியமையாதது என்று நேரு கருதினார். அரசு விவகாரங்களுக்கும் மதத்திற்கும் இடையே தெளிவான பிரிவினை இருக்க வேண்டும் என்று அவர் வாதாடியதுடன், அரசு எந்தவொரு தனிப்பட்ட மதத்தையும் ஆதரிக்கக் கூடாது என்றும் நம்பினார். அவரது மதச்சார்பின்மை வரையறையானது அனைத்து மதங்களுக்கும் சமமான மரியாதைஎன்ற கொள்கையோடு ஒத்துப் போனது.

மேலும், புதிய தேசத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதில் அவர் பெரும் முக்கியத்துவம் அளித்தார். ஆனால், மோடியின் தலைமையில் பாரதிய ஜனதா கட்சி முன்னென்றும் இல்லாத வகையில் சிறுபான்மைச் சமூகங்களுக்கு குறிப்பாக சனத்தொகையில் 20 சதவீதத்தினராக அமைந்திருக்கும் முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத் தலைத் தோற்றுவித்திருக்கும் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறது. மதசார்பின்மைக்கு எதிரான இந்துத்வா கோட்பாட்டை மோடி அரசாங்கம் கடைப்பிடிக்கிறது.

ஆனால், மதசார்பின்மை. இல்லை என்றால் இந்தியா ஒருபோதும் இந்தியாவாக இருக்காது என்று கூறிய அடல் பஹாரி வாஜ்பாயையும் பிதமராகக் கொண்டு அந்த நாட்டில் ஒருகாலத்தில் பாரதிய ஜனதா அரசாங்கம் ஒன்று பதவியில் இருந்தது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்டுவது பொருத்தமானதாகும்.

# கே. அண்ணாமலை; புதிய அத்தியாயம்



ஜூன் 5, 2026 அன்று, 42 வயதான முன்னாள் இந்தியக் காவல்துறை அதிகாரியான குப்புசாமி அண்ணாமலை, எதிர்காலத்தில் ஒரு பிராந்திய அரசியல் கட்சியாக உருவெடுக்கும் நோக்கில் ஒரு "இயக்கத்தை" தொடங்குவதாக அறிவித்தார். இந்த இயக்கத்தில் முதல் நாளிலேயே 10 இலட்சத்திற்கும் அதிகமானோர் பதிவு செய்துள்ளனர். அதே நாளில், பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க.) அண்ணாமலையின் இராஜினாமாவை ஏற்றுக் கொண்டதாக அறிவித்தது.

அண்ணாமலை பா.ஜ.க. விலிருந்து விலகி புதிய கட்சி தொடங்க உள்ளதாக ஜனவரி மாதத்திலிருந்தே செய்திகள் உலா வந்தன. திருப்பூர் மற்றும் கோவை மாவட்டங்களில், மே கடைசி வாரத்தில் அண்ணாமலையின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு, அவரிடமிருந்து விரைவில் ஒரு அறிவிப்பு வரப்போவதை உணர்த்தின.

தேர்தலுக்கு பின்னர் கோவையில் பா.ஜ.க. நடத்திய கூட்டத்திலும் அவர் கலந்து கொள்ளவில்லை. ஜூன் 2. அன்று பாஜக தலைமைக்கு எழுதிய கடிதத்தில், தமிழ்நாடு தொடர்பாக பா.ஜ.க. தலைவர்களின் கருத்துகளுடன் தனது கருத்துகள் ஒத்துப்போகவில்லை என்று அண்ணாமலை குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பாக கடந்த 18 மாதங்களாக மாநிலத் தலைவர்களுடன் பலமுறை கருத்து வேறுபாடுகளும் அவருக்கு ஏற்பட்டுள்ளன.

"ஒரு வலுவானதும் ஒன்றுபட்டதுமான இந்தியா என்பது, அதன் பல பிராந்தியங்கள் மற்றும் சமூகங்களின் வலிமை, கண்ணியம் மற்றும் அபிலாசைகளின் மீதுதான் கட்டமைக்கப்படுகிறது என்று நான் உறுதியாக நம்புகிறேன்," என்று பா.ஜ.க. தலைவர் நிதின் நபினுக்கு எழுதிய கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்ணாமலையின் அரசியல் பயணம் 2020-இல் தொடங்கியது, அப்போது பா.ஜ.க. பொதுச்செயலாளர் பி. எல். சந்தோஷ் அவரை ஒரு சாத்தியமான தலைவராக அடையாளம் கண்டார். பெங்களூரு (தெற்கு) துணை காவல் ஆணையர் பதவியை இராஜினாமா செய்த அவர், 2020-இல் பா.ஜ.க. வில் இணைந்தார். சில வாரங்களிலேயே கட்சியின் தமிழக துணைத் தலைவராக நியமிக்கப்பட்ட அவர், 2021 சட்டமன்றத் தேர்தலில் கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி தொகுதியில் போட்டியிட்டார்.

அங்கு அவர் தி.மு.க.வின் ஆர். இளங்கோவிடம் தோல்வியடைந்தார்.

ஜூலை 2021-இல், அவர் பா.ஜ.க. வின் தமிழ்நாடு மாநிலத் தலைவராகப் பொறுப்பேற்றார். தனது 37-ஆவது வயதில், ஜூலை 16, 2021 முதல் ஏப்ரல் 11, 2025 வரை பாஜக மாநிலப் பிரிவுக்குத் தலைமை தாங்கிய மிக இளைய தலைவர் என்ற பெருமையைப் பெற்றார்.

ஜூலை 2023-இல் அவர் தொடங்கிய "என் மண், என் மக்கள்" நடை பயணம் மாநிலத்தின் பல பகுதிகளில் பெருமளவில் கூட்டத்தைக் கூட்டியது டன், பல இளைஞர்களைக் கட்சியின் பால் ஈர்த்தது. இருப்பினும், அந்த ஆண்டில் அண்ணா தி.மு.க.வின் கொள்கைக்கும் அதன் சில தலைவர்களுக்கும் எதிராக அவர் தெரிவித்த கருத்துகள், அண்ணா தி.மு.க. பாஜகவுடனான உறவை முறித்துக் கொண்டு தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து வெளியேற வழிவகுத்தது.

அண்ணா தி.மு.க.வுடன் கூட்டணி இல்லாமல் தமிழகத்தில் பா.ஜ.க. தேர்தலை சந்திக்க வேண்டும் என்று அண்ணாமலை குரல் கொடுத்தார். 2024 பாராளுமன்றத் தேர்தலுக்காக, பாட்டாளி மக்கள் கட்சி, தமிழ் மாநில காங்கிரஸ் மற்றும் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகளைத் தமிழக தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குள் அண்ணாமலை கொண்டு வந்தார். அவர் கோயம்புத்தூரில் போட்டியிட்டு தி.மு.க. வின் கணபதி பி. ராஜ்குமாரிடம் தோல்வியடைந்தார்.

2026 சட்டமன்றத் தேர்தலில் அண்ணா தி.மு.க. பா.ஜ.க. வுடன் கூட்டணி வைக்க வேண்டுமானால், அண்ணாமலையை மாநிலத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமி விரும்பியதாகக் கூறப்படுகிறது.

கரூர் மாவட்டம் தோப்பம்பட்டியில் ஜூன் 4, 1984 அன்று ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த அண்ணாமலை, கோயம்புத்தூரில் உள்ள பி.எஸ்.ஜி தொழில்நுட்பக் கல்லூரியில் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் பட்டம் பெற்றார். பின்னர் லக்னோவில் உள்ள இந்திய மேலாண்மைக் கழகத்தில் எம்.பி.ஏ. படித்தார். 2011-ஆம் ஆண்டு கர்நாடகப் பிரிவின் கீழ் இந்தியக் காவல் பணியில் சேர்ந்த அவர், 2020 வரை கர்நாடகாவில் பணியாற்றினார்.

அவர் தீவிர அரசியலில் ஈடுபடுவதற்கு முன்பே, 2019-20 இல் "வி தி லீடர்ஸ்" (We the Leaders) என்ற அறக்கட்டளையைத் தொடங்கினார். இது இயற்கை விவசாயம், அடிமட்டத் தலைமைத்துவம், திறன் மேம்பாடு மற்றும் விளையாட்டு மூலம் சுயாற்றல் அளித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. அண்ணாமலை தனது இயக்கத்தில் ஆர்வமுள்ளவர்களை "வி தி லீடர்ஸ்" அமைப்பில் பதிவு செய்ய அழைப்பு விடுத்ததைத் தொடர்ந்து, ஜூன் 6 பிற்பகல் நிலைவரப்படி 13,17,808 பதிவுகள் செய்யப்பட்டுள்ளன.

பா.ஜ.க.விலிருந்து விலகிய பிறகு, ஜூன் 5 அன்று பொதுமக்களிடையே உரையாற்றிய அண்ணாமலை, இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் கொள்கைகளால் தான் ஈர்க்கப்பட்டதாகக் கூறினார். தூய்மையானதும் தனக்கோ அல்லது யாருக்குமே "நிரந்தர நாற்காலி" இல்லாத ஆக்கப்பூர்வமானதுமான அரசியலைக் கொண்டு வரப்போவதாக அவர் கூறினார்.

"நாம் தனிநபர் வழிபாட்டு அரசியலில் இருந்து வெளியே வர வேண்டும். இது சாமானிய மக்களின் அரசியலாக இருக்கும்," என்று அவர் சமூக ஊடக தளங்களில் ஆற்றிய உரையில் தெரிவித்தார்.

அரசியல் தலைமைத்துவத்திற்காக மக்களைப் பயிற்றுவிக்கவும் தயார்படுத்தவும் கோயம்புத்தூரில் "ஏ.பி.ஜே. அப்துல் கலாம் நெறிமுறைகள் மற்றும் அரசியல் மையத்தை" (APJ Abdul Kalam Centre for Ethics and Politics) நிறுவுவதாகவும் அவர் அறிவித்தார். அண்ணாமலை தமிழக உள்ளாட்சித் தேர்தல்களில் வேட்பாளர்களை நிறுத்துவார் என்றும், 2029 பொதுத் தேர்தலில் பங்கேற்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

(சௌந்தர்யா பிரீதா, தி இந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாகக் கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியை அனுசரித்து போங்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**இடபம்**
எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**மிதுனம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். அமைதி நிலவும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறு சிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் அதிருப்தி அடைவார்கள். இடம்பொருள்ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்.

**கன்னி**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். விலை உயர்ந்தப் பொருட்கள் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**துலாம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

**விருட்சிகம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும்.

**தனுசு**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். யோகா தியானத்தில் மனம் செல்லும். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவுக் கிடைக்கும். உயர்வு பெறும் நாள்.

**மகரம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிகஅக்கறை காட்டுவார்கள். அதிகாரிகள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வெற்றிக்கு வித்திடும்.

**கும்பம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டிய நாள்.

# கைதான சொல்லிசை பாடகர் சங்கீத்ஷனை விடுவிக்க கோரி வவுனியாவில் போராட்டம்!

வவுனியா, ஜூன். 10

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள சொல்லிசை பாடகர் சங்கீத்ஷனை உடனடியாக விடுவிக்கக் கோரி வவுனியா பழைய பஸ் நிலையப் பகுதியில் நேற்று முன் தினம் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.



வவுனியா கலைஞர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் அரசியல் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, கருத்துச் சுதந்திரத்தையும் கலைஞர்களின் உரிமைகளையும் மதிக்க வேண்டும் என வலியுறுத்திய போராட்டக்காரர்கள், சங்கீத்ஷனை நிபந்தனையின்றி விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

கலைஞர்கள் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பிலும் தமது கவலையை தெரிவித்தனர்.

பழைய பேருந்து நிலைய பகுதியில் ஆரம்பமான இந்தப் போராட்டம் அங்கிருந்து மணிக்கூட்டு கோபுரசந்தி வரை ஊர்வலமாக சென்று மீண்டும் போராட்ட இடத்தை அடைந்தது. (அ)

# வடமராட்சி கிழக்கு இளைஞர் கழக சம்மேளனம் தேசிய ரீதியில் சாதனை




யாழ்ப்பாணம், ஜூன். 10

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்படும் 36ஆவது தேசிய விளையாட்டு நிகழ்வின் ஒரு அங்கமான கடற்கரை கரப்பந்து போட்டி நீர்கொழும்பு பிரவுன் கடற்கரையில் நடைபெற்றது.

இப்போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, வடமராட்சி கிழக்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட அம்பன் மருதம் இளைஞர் கழகத்தைச் சேர்ந்த வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

மாவட்ட மட்டத்தில் தங்களது அசாத்திய திறமைகளை வெளிப்படுத்தி, தேசிய ரீதியிலான போட்டிக்கு தகுதி பெற்றிருந்த இவ்வீராங்கனைகள், தேசிய மட்டப் போட்டிகளிலும் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வடமராட்சி கிழக்கு பிரதேசத்துக்கு பெரும் பெருமையைத் தேடித் தந்துள்ளனர். (அ)

# நாகர்கோவில் காட்டில் குண்டு மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன். 10

மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகர்கோவில் கிழக்கு பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில், யுத்த காலத்தில் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கைக்குண்டு ஒன்று நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் மாலை 6:20 மணியளவில், நாகர்கோவில் கிழக்கு வனப்பகுதியில் உள்ள பனை மரமொன்றின் அடியில் இந்த கைக்குண்டு இருப்பதை அவதானித்த பொது மக்கள், அது குறித்து மருதங்கேணி பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த மருதங்கேணி பொலிஸார், குண்டு இருக்கும் பகுதியை அடையாளப்படுத்தி, அதன் பாதுகாப்பிற்காக இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களை பணியில் அமர்த்தியுள்ளனர். (அ)

# நுணாவில் பகுதியில் சருகுப் புலி மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன். 10

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் மேற்கு பகுதியில் பொதுமக்களின் குடியிருப்புகளுக்குள் புகுந்த சருகுப் புலி பாதுகாப்பாக மீட்கப்பட்டு வனஜீவராசிகள் திணைக்களத்தினால் கொண்டு செல்லப்பட்டது.

குறித்த சருகுப் புலி அண்மைக்காலங்களில் குடியிருப்பு பகுதிகளுக்குள் புகுந்து கால்நடைகள் மற்றும் செல்லப்பிராணிகளை வேட்டையாடி வந்த நிலையில், நேற்று முன்தினம் சாவகச்சேரி பொலிஸாரின் உதவியுடன் கிராம மக்கள் இணைந்து பிடித்துள்ளனர்.

அதனை தொடர்ந்து வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், கிளிநொச்சியில் இருந்து வந்த வனஜீவராசிகள் திணைக்களத்தினர் சருகுப் புலியை பாதுகாப்பாக கொண்டு சென்றனர். (அ)

# தென்மராட்சிக் கல்வி வலயத்தின் தென்னருவி வர்த்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன். 10

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்படும் தென்னருவி வர்த்தகக் கண்காட்சியும் தொழிற் சந்தையும் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், 13 ஆம் திகதி சனிக்கிழமையும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சியிலுள்ள முயற்சியாண்மைகளை இனங்கண்டு தொழில்முயற்சியாளர்களை அறிமுகப்படுத்தும் வகையிலும், மாணவர்கள் மத்தியில் முயற்சியாண்மைச் சிந்தனையையும் பாடஞ்சார் அறிவையும் வளர்க்கும் வகையிலும், தொழில் வழிகாட்டலை வழங்கும் வகையிலும் இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் வட மாகாண கல்விப் பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன் பிரதம விருந்தினராகவும், வட மாகாண கல்வித் திணைக்கள வர்த்தக பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.சுபாகரன் சிறப்பு விருந்தினராகவும், தென்மராட்சி அபிவிருத்திக் கழகத் தலைவரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபருமான அ.கயிலாயப்பிள்ளை கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இக்கண்காட்சியில் வலய வர்த்தகப் பிரிவினரால் முயற்சியாண்மையாளர்களின் காட்சிக் கூடங்களும், வணிக முகாமைத்துவம், கணக்கீடுசார் நிறுவனங்களின் தொழில் வழிகாட்டல் அலகுகளின் கூடங்களும் காட்சிப்படுத்தப்படுவதோடு, வலய தொழில் வழிகாட்டல் அலகினால் தொழிற்சந்தைச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# டயஸ்போராக்களின் தேவைக்காகவே இலக்கு வைக்கப்பட்டார் சுரேஷ் சாலே!

## மொட்டு கட்சி குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன். 10

"புலி டயஸ்போராக்களின் தேவையை நிறைவேற்றுவதற்காகவே சுரேஷ் சாலே இலக்கு வைக்கப்பட்டுள்ளார்."-என்று பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

பயங்கரவாத தடைச்சட்டம் தவறானது என சுட்டிக்காட்டியே ஜே.வி.பி. ஆட்சிக்கு வந்தது. ஆனால் அச்சட்டத்தை பயன்படுத்தியே சுரேஷ் சாலேயை தடுத்து வைக்கும் உத்தரவில் ஜனாதிபதி கையொப்பம் இட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் நடக்கும்போதும் அதற்கு முற்பட்ட காலப்பகுதியிலும் சுரேஷ் சாலே எமது நாட்டில் இருக்கவில்லை. நிலைமை இவ்வாறு இருக்கையில் சாலே ஏன் இலக்கு வைக்கப்பட்டுள்ளார்?

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு புலி டயஸ்போரா உட்பட அடிப்படைவாதிகளே ஆதரவளித்தனர். நாட்டின் பாதுகாப்பை சீர்குலைப்பதும், எதிர்காலத்தில் பிரிவினைவாதம் ஏற்பட்டால் நாட்டுக்காக முன்னிலையாபவர்கள் ஒடுக்குவதுமே இவர்களின் நோக்கம்.

எனவே, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பிரிவினைவாதிகளின் தேவைகளையே நிறைவேற்றிவருகின்றது.

புலிகளை ஒழிப்பதற்கு ஒத்துழைப்பு நல்கி இந்நாட்டுக்கு அமைதியை கொண்டுவந்தவர்தான் சுரேஷ் சலே. இன்று மக்களால் சுதந்திரமாக வாழ முடிகின்றதெனில் அதற்கு சுரேஷ் சலே போன்றவர்களின் அர்ப்பணிப்புதான் காரணம்.'-என்றார் சாகர காரியவசம். (அ)

சுரேஷ் சாலே தொடர்பான விசாரணை;

# மனித உரிமைகள் ஆணைக்குழு சி.ஐ.டி அதிகாரிகளுக்கு அழைப்பு

கொழும்பு, ஜூன். 10

முன்னாள் அரச புலனாய்வுச் சேவை பணிப்பாளர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே தொடர்பான தற்போதைய விசாரணைகள் குறித்த தகவல்களை வழங்குவதற்காக, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் இந்த வாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளனர்.

சுரேஷ் சாலேவின் உறவினர்கள் தாக்கல் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்கனவே இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக மனித உரிமைகள் ஆணையாளர் நிமல் ஜி.புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கடந்த வாரம் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டிருந்தபோதிலும், அவர்களால் சமூகமளிக்க முடியாமல் போனதால் மற்றுமொரு திகதியை கோரியிருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, இந்த விசாரணைப் பொறுப்பிலுள்ள பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் இந்த வாரத்துக்குள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

# இலங்கையில் முதல்முறையாக கனிம வளங்களை மூலப்பொருள்களாக ஏற்றுமதி செய்வதற்கு தடை!

கொழும்பு, ஜூன். 10

கனிம வளங்களை மூலப் பொருள்களாக ஏற்றுமதி செய்யத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கூடியது. இதன்போது, கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி புதிய தேசிய கனியவளக் கொள்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய போதே இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில், கனிம வளங்கள் தொடர்பான அகழ்வாராய்ச்சி, அகழ்வுப் பணிகள், பதப்படுத்துதல் மற்றும் அவற்றுக்கு மேலதிக பெறுமதி சேர்த்தல் ஆகிய ஒட்டுமொத்த செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாக இந்த புதிய கொள்கை உருவாக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி சுட்டிக்காட்டினார்.

"இதற்கு முன்னர் கடந்த 1999 ஆம் ஆண்டிலேயே இலங்கையில் தேசிய கனியவளக் கொள்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், தற்போதைய நவீன காலத்திற்கும் நாட்டின் பொருளாதாரத் தேவைகளுக்கும் பொருத்தமான வகையில், 27 வருடங்களின் பின்னர் அது முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்டு, புதிய திருத்தங்களுடன் இந்த 2026 ஆம் ஆண்டுக்கான கொள்கையை நாம் சமர்ப்பித்துள்ளோம்.

இதுவரையான காலப்பகுதியில் இலங்கையிலிருந்து கனிம வளங்கள் வெறும் மூலப்பொருள்களாகவே வெளிநாடுகளுக்கு குறைந்த விலைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன.

இதனால் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய பெருமளவிலான வருமானம் இல்லாது போனது. எனினும், இந்த புதிய கொள்கையின் கீழ், இனிவரும் காலங்களில் கனிம வளங்களை வெறும் மூலப்பொருள்களாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியாது."-என்றார் அவர். (அ)

# டித்வா அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டும் அபாயகரமான வீடுகளுக்கு திரும்பும் மக்கள்

## தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன். 10

கடந்த ஆறு மாதங்களாக நிவாரண முகாம்களில் தங்கியிருந்த, டித்வா அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சில மக்கள், மீண்டும் தங்களின் அபாயகரமான வீடுகளுக்குத் திரும்புவது குறித்து அவர்களுக்கு வழங்கக் கூடிய மாற்று வழிகள் என்ன என்பது தொடர்பான விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிவாரண முகாம்களில் தங்கியிருந்த சிலர் தங்களின் பழைய அபாயகரமான வீடுகளுக்குத் திரும்புகின்றமை அண்மையில் வெளிச்சத்திற்கு வந்ததைத் தொடர்ந்து, இது குறித்து கருத்துத் தெரிவித்த தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், இவை "தனிமைப்படுத்தப்பட்ட சம்பவங்கள்" என அடையாளம் காணப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

மேலும், பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்துவதற்கான முறையான கண்காணிப்பு பொறிமுறையொன்று தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அது தெரிவித்தது.

இது தொடர்பாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஆசிறி கருணாவர்தன கருத்து வெளியிடுகையில்,

ஒரு பகுதி அல்லது ஒரு வீடு அபாயகரமானது என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் பிரகடனப்படுத்தும் போது, அதற்காக பல அளவுகோல்கள் கருத்திற் கொள்ளப்படுகின்றன. எனவே, அத்தகைய வீடுகளுக்கு மக்கள் மீண்டும் திரும்புவது எவ்வகையிலும் ஊக்குவிக்கப்படுவதில்லை. இருப்பினும், நிவாரண முகாம்களில் நிலவும் மோசமான நிலைமைகள் காரணமாக மக்கள் மீண்டும் தங்களது வீடுகளுக்குத் திரும்பியதாக சில சம்பவங்கள் அறிக்கை செய்யப்பட்டுள்ளன. இது குறித்த விசாரணைகள் தற்போது நடைபெற்று வருகின்றன எனத் தெரிவித்தார்.

கொத்மலையில் உள்ள நிவாரண முகாம் ஒன்றில் கூடாரங்களில் வசித்து வந்த சுமார் 25 பேர், மீண்டும் தங்களின் அபாயகரமான வீடுகளுக்குச் சென்றுள்ளதாக அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நாட்டின் உளவுத்துறையை பலவீனப்படுத்துகிறது அரசு!

## நாமல் பகிரங்க குற்றச்சாட்டு



கொழும்பு, ஜுன். 10

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர பங்களித்த உளவுத்துறை அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதன் மூலம், தற்போதைய அரசாங்கம் நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் உளவுத்துறையை பலவீனப்படுத்தி வருவதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

கெகிராவ பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

பயங்கரவாதத்தை தோற்கடிப்பதிலும் தேசிய பாதுகாப்பைப் பாதுகாப்பதிலும் முக்கிய பங்காற்றிய உளவுத்துறை அதிகாரிகள் சிறையில் அடைக்கப்பட்டு வருகின்றனர்.

அதேநேரம், 2019 உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான தகவல்களை மறைத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் பாதுகாக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தைப் போன்று உளவுத்துறை அதிகாரிகளைக் கைது செய்யும் இவ்வாறான நடவடிக்கைகள், நாட்டின் பாதுகாப்பு கட்டமைப்பை சீர்குலைத்து தீவிரவாத சக்திகள் மீண்டும் உருவாவதற்கான சூழலை ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரித்தார். (அ)



யாழ் - கதிர்காமம் பாதயாத்திரிகர்கள் 18ஆம் நாளான நேற்று முன் தினம் திரியாய் வரத விக்கினேஸ்வரா விநாயகர் ஆலயத்தில் இருந்து குச்சவெளி பாலம் ஊடாக பயணித்தனர். (அ)

## சுற்றுலாத்துறையில் புதிய சாதனை

கொழும்பு, ஜுன். 10

இலங்கை சுற்றுலாத்துறையானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சாதனையை எட்டியுள்ளது.

கடந்த மே மாதத்தில் மாத்திரம் 145,745 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மே மாதமொன்றில் பதிவான அதிகூடிய சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கை இது வாகும்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அண்மைய தரவுகளின்படி, 132,919 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்த 2025 ஆம் ஆண்டின் மே மாதத்துடன் ஒப்பிடுகையில், இது 9.6 வீத வளர்ச்சியாகும்.

இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த நாடுகளின் வரிசையில் இந்தியா முதலிடத்தைப் பிடித்துள்ளதுடன், அங்கிருந்து 60,342 பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இதற்கு அடுத்தபடியாக ஐக்கிய இராச்சியம் (9,248), சீனா (9,156), ஜெர்மனி (6,734) மற்றும் அவுஸ்திரேலியா (6,414) ஆகிய நாடுகள் தரவரிசையில் முன்னிலையில் உள்ளன.

இந்த வரலாற்றுச் சாதனையானது சுற்றுலாத்துறையின் திருப்புமுனை என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் பாராட்டு தெரிவித்துள்ளார்.

## காரைதீவு பத்திரகாளி அம்பாளின் மகோற்சவ தீ மிதிப்பு வைபவம்

காரைதீவு, ஜுன். 10

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு சிறீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் மற்றும் தீமிதிப்பு வைபவம் இன்று புதன்கிழமை காலை 8.10 மணியளவில் கடல் நீர் கொணர்ந்து திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகவுள்ளது.

ஆலய பிரதம பூசகர் கி.சரவணபவா தலைமையில் நடைபெறவுள்ள மகோற்சவம், 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீமிதிப்பு வைபவத்துடன் நிறைவு பெறவுள்ளதென ஆலய தலைவர் கலாபூசணம் எஸ். இராமநாதன் தெரிவித்தார்.

ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் போது 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாற்குடபவனியும், 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முத்துச்சப்பற ஊர்வலமும் இடம்பெறவுள்ளது.

மகோற்சவ காலத்தில் பகல் 12.30 மணிக்கும் இரவு 7.00 மணிக்கும் பூசைகள் நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## பேராதனை தாவரவியல் பூங்காவுக்கு புதிதாக பத்து மின்சார வாகனங்கள்!

கொழும்பு, ஜுன். 10

இலங்கையின் மிக முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒன்றான பேராதனை ரோயல் தாவரவியல் பூங்காவிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வசதியை மேம்படுத்துவதற்காகவும், சுற்றுலாவை மேலும் ஊக்குவிப்பதற்காகவும் 10 புதிய மின்சார வாகனங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

சுற்றுச்சூழல் பிரதி அமைச்சர் அன்ரன் ஜெயக்கொடி தலைமையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் இந்த வாகனங்கள் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

முழுமையாக அரசாங்க நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பேராதனை பூங்காவுக்குள் நீண்ட காலமாக நிலவி வந்த போக்குவரத்துத் தேவையை இந்தத் திட்டம் பூர்த்தி செய்யும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இந்த பரந்த பூமிப்பரப்பைச் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பில்லாத வகையில் இலகுவாக சுற்றிப் பார்க்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தினமும் பெருமளவிலான சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இந்த பூங்காவிற்குள், நடமாடுவதில் சிரமங்களை எதிர்கொள்ளும் முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட அனைவருக்கும் இந்த மின்சார வாகன சேவை பெரும் உதவியாக அமையும் என நம்பப்படுகிறது.

இந்த நிகழ்வில் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தனுர திஸாநாயக்க, தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்திரிகா ஜயவர்தன மற்றும் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (அ)

## வாகன இலக்கத் தகடுகளை அச்சிடும் பணிகள் ஆரம்பம்!

கொழும்பு, ஜுன். 10

ஒரு வருடத்திற்கும் மேலாக இடைநிறுத்தப்பட்டிருந்த வாகன இலக்கத் தகடுகளை அச்சிடும் பணிகள், வெரஹெரவிலுள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள வளாகத்தில் நேற்று முன் தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொள்முதல் நடைமுறைகளில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாகவே இந்த பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததாக சுட்டிக்காட்டியுள்ள போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன, தற்போது அந்த தடைகள் அனைத்தும் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது சுமார் 150,000 வாகன இலக்கத் தகடுகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலுவையில் உள்ள இலக்கத் தகடுகளை அச்சிடும் பணிகள் அனைத்தும் வரும் மாதங்களில் முழுமையாக நிறைவு செய்யப்படும் என அதிகாரிகள் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இலக்கத் தகடுகள் அச்சிடப்பட்டு தயாரானதும், அது குறித்து வாகன உரிமையாளர்களுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கில் புதிய குறுஞ்செய்தி அறிவிப்பு முறையொன்றும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பஹ்ரைன் நாட்டு மாம்பழ விழாக்களில் முதன்மை பெற்ற இலங்கை மாம்பழங்கள்

கொழும்பு, ஜுன். 10

பஹ்ரைனில் கடந்த மே மற்றும் ஜுன் மாதங்களில் நடைபெற்ற மாம்பழ விழாக்களில் இலங்கை மாம்பழங்கள் பிரதானமாக காட்சிப்படுத்தப்பட்டு, அங்குள்ள நுகர்வோர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

அந்நாட்டின் முன்னணி பல்பொருள் அங்காடி வலையமைப்புகளான லூலூ ஹைப்பர் மார்க்கெட் மற்றும் அல் ஜெஸீரா ஆகியவற்றில் இந்த விழாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

பஹ்ரைனுக்கான இலங்கை தூதரகத்தின் பொருளாதார ரீதியிலான இராஜதந்திர முயற்சிகளின் ஒரு பகுதியாக, இலங்கையிலிருந்து புதிய மாம்பழங்கள் மற்றும் ஏனைய பழ வகைகளை இறக்குமதி செய்யுமாறு பஹ்ரைனின் முன்னணி சில்லறை விற்பனையாளர்களுக்கு தொடர்ச்சியாக ஊக்குவிப்பு வழங்கப்பட்டு வந்தது.

இதற்கமைய, கடந்த மே மாதம் 23ஆம் திகதி லூலூ ஹைப்பர் மார்க்கெட் சங்கிலியினால் "மங்கோ மேனியா" எனும் பெயரில் உலகெங்கிலும் உள்ள பல்வேறு வகையான மாம்பழங்களை உள்ளடக்கிய விழா ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் இலங்கை மாம்பழங்கள் விசேட இடத்தைப் பிடித்திருந்தன.

அதனைத் தொடர்ந்து, ஜுன் 4ஆம் திகதி அல் ஜெஸீரா பல்பொருள் அங்காடியில் ஆரம்பமான "தி கிரேட் மங்கோ புட்பால் பீஸ்டா" தொடக்க விழாவிலும் இலங்கை மாம்பழங்கள் மீண்டும் முன்னிலைப்படுத்தப்பட்டன.

இந்த விழாக்களில் இலங்கை மட்டுமன்றி இந்தியா, தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் மாம்பழங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

அல் ஜெஸீரா விழாவின் சிறப்பம்சமாக, இலங்கை மாம்பழங்களை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட இலங்கை பாரம்பரிய உணவுகள் குறித்த நேரடி சமையல் விளக்கக்காட்சி ஒன்றும் இடம்பெற்றது. (அ)

## இணையவழி மூலம் மாணவர்களுக்கு ஏற்படும் தீய விளைவுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, ஜுன். 09

இணையவழி மற்றும் தனியார் பிரத்தியேக வகுப்புக்கள் மூலம் மாணவர்களுக்கு ஏற்படும் தீய விளைவுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில், மூன்று அம்சங்களைக் கொண்ட புதிய ஒழுங்குமுறை விதிமுறைகளை அறிமுகப்படுத்தக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இரவு நேரங்களில் நீண்ட நேரம் இணையவழி வகுப்புக்கள் நடத்தப்படுவதால் மாணவர்களின் கண் மற்றும் உடல் நலம் பாதிக்கப்படுவதாகக் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து, திரையைத் பார்க்கும் நேரத்தைக் கட்டுப்படுத்தக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பிரதி அமைச்சர் கலாநிதி மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், சில ஆசிரியர்கள் வகுப்புக்களின்போது மாணவர்களைத் தரக்குறைவான வார்த்தைகளால் கடிந்து கொள்ளும் வாய்மொழித் துஷ்பிரயோகங்கள் குறித்துப் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் ஊடாகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மீனவர்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஜூன். 10

நாட்டை சுற்றியுள்ள கடல் பரப்புகளில் கடும் காற்று மற்றும் கொந்தளிப்பான கடல் நிலைமை ஏற்படும் சாத்தியம் உள்ளதால், கடற்படையினருக்கும் மீனவ சமூகத்துக்கும் வளி மண்டலவியல் திணைக்களம் அவசர சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக கற்பிட்டி வரையான கரையோரத்துக்கு அப்பாலுள்ள கடற்பரப்புகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும்.

இங்கு காற்றின் வேக மானது அவ்வப்போது மணித்தியா லத்திற்கு 60-70 கிலோ மீற்றர் வரை மிக பலத்த காற்றாக வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மறு அறிவித்தல் வரும் வரை கடல் பயணம் செய்வோரும், மீனவ சமூகமும் இந்த குறிப்பிட்ட கடற்பரப்புகளில் கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கடுமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(அ)

## நாட்டின் பொருளாதார...

இதற்குப் பொறுப்பான பொருளாதாரக் குற்றவாளிகள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் என உயர் நீதிமன்றமே தெளிவாகத் தீர்ப்பளித்துள்ளது. இது எமது அரசாங்கக் காலத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பும் அல்ல. அவர்கள் அப்பட்டமான பொருளாதாரக் கொலைகாரர்கள்.

அரசியல் திருடர்கள் மற்றும் பொருளாதாரக் கொலைகாரர்கள் ஏற்படுத்திய நெருக்கடிகளுக்கு மத்தியிலும், சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளுக்கு முகம் கொடுத்து நாட்டை தற்போதைய அரசாங்கம் முன்னோக்கி வழிநடத்திச் செல்கிறது.

கடந்த 2025ஆம் ஆண்டு மே மாதத்தில் 132,919 ஆக இருந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை, இந்த 2026ஆம் ஆண்டு மே மாதத்தில் 145,745 ஆக அதிகரித்துள்ளது. இது 9.6 வீத வளர்ச்சியாகும்.

தற்போது நிலவுவது சுற்றுலாத் துறைக்கான பிரதான பருவகாலம் அல்லாத போதிலும், நாடு தழுவிய ரீதியில் பதிவுசெய்யப்பட்ட தங்குமிடங்களின் விடுதி நிரம்பல் விகிதம் 30 வீதம் முதல் 35 வீதம் வரை நிலையாகப் பேணப்பட்டு வருகிறது.

நாட்டைப் படுகுழியில் தள்ளியவர்கள் இன்று பாராளுமன்றத்தில் வந்து தொழில்நுட்பக் குறைபாடுகள் பற்றிப் பேசுவது வேடிக்கையானது. எதிர்க்கட்சிகளின் போலிப் பிரசாரங்களைத் தாண்டி நாட்டின் சுற்றுலாத் துறை சிறப்பான முன்னேற்றத்தைக் கண்டு வருகிறது-என்றார். (அ)

## பாட்டு பாடினால்...

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இன்று சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார். இது மிகவும் வரலாற்றிலே ஒரு துயரமான சம்பவம்.

இந்த நாட்டில் 78 ஆம் ஆண்டிலே கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் என்பது சிங்கள இளைஞர்களையும் தமிழ் இளைஞர்களையும் மிக மோசமாக பாதித்திருந்தது. இன்று அரசமைத்திருக்கிற ஜே.வி.பி ஃ என்.பி.பி. ஆக இருக்கலாம், அவர்கள் மாற்றம் பெற்றிருந்தாலும் கூட, 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்களும் யுவதிகளும் மிக மோசமாக படுகொலை செய்யப்படுவதற்கும் இந்த நாட்டிலே மிக மோசமாக அழிக்கப்படுவதற்கும் இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை அப்போது இருந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தைச் சேர்ந்த ஜே.ஆர். ஜெயவர்தன, பிரேமதாஸ போன்றவர்கள் மிக கொடூரமாக அதனை பயன்படுத்தி இருந்தார்கள்.

கொடூரமான இந்த சட்டத்தை நீக்குகிறோம் என்று பலமுறை எதிர்க்கட்சி வரிசையில் இருந்த இன்றைய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க உட்பட உங்களுடைய அரசாங்கம் பல தடவைகள் இந்த செய்தியைச் சொல்லியிருந்தார்கள் . "நாங்கள் இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை உடனே வந்தவுடன் நீக்குவோம்" என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு இரண்டு ஆண்டுகள் கடக்கப் போகிறது, இதுவரை இந்த பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவில்லை. அதற்கான ஒரு புதிய பயங்கரவாத தடைச்சட்டம் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். ஒரு கோடு இருக்கிறது, அதற்கு இன்னொரு பெரிய கோட்டை கீறுகிறீர்களே தவிர, அதனை நீக்குகின்ற நிலையில் இல்லை.

இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஊடாகத்தான் இந்த நாட்டிலே தமிழ் மக்கள் மிகக் கொடுமைகளை சந்தித்தார்கள். 2006 ஆம் ஆண்டு, 2009 ஆம் ஆண்டு காலங்களில், குறிப்பாக 2006 கிழக்கு மண்ணினுடைய வாகரையிலே நடந்த மிகப்பெரிய இறுதியான இனப்படுகொலைகளும், 2009 ஆம் ஆண்டு வடக்கு மண்ணிலே முள்ளிவாய்க்காலிலே நடந்த இனப்படுகொலைகளுக்கும் இந்த பயங்கரவாத தடைச்சட்டம் மிக காரணமாக இருந்தது.

இந்த சட்டத்தை பயன்படுத்தி இன்று கணேஷ்குமார் சங்கீத்சன் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் ஒரு பாடல் பாடி இருந்தார். இந்த நாட்டிலே பாடுகின்ற உரிமை தடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி என்றால் இந்த சபையிலே நீங்கள் சொல்ல வேண்டும், பேசுகின்ற உரிமை தடுக்கப்பட்டிருக்கிறதா? தீபச்செல்வன் புத்தகங்களை எழுதியிருந்தார், இந்தியாவிலிருந்து வந்த புத்தகங்கள் சுங்க திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. எழுதுகின்ற உரிமை தடுக்கப்பட்டிருக்கிறது, பாடுகின்ற உரிமை தடுக்கப்படுகிறது, கூட்டம் கூடுகின்ற உரிமை தடுக்கப்படுகிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தை வைத்தே நீங்கள் இதனை செய்கின்றீர்கள்.

இப்பொழுதும் நான் இந்த இடத்திலே உயர்ந்த சபையிலே சொல்லுகிறேன், நீங்கள் அவர்களை விடுவிக்கவில்லையானால், சங்கீத்சனை உடனடியாக இந்த அரசு விடுவிக்கவில்லை என்றால், வடக்கு கிழக்கு தழுவி ஒரு மாபெரும் போராட்டத்திற்கு மக்கள் தயாராகிறார்கள். இளைஞர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், பேச முடியாமல் இருக்கிறார்கள். அரசு பொறுப்பேற்ற காலத்திலிருந்து அபிவிருத்தி என்ற வார்த்தைகளை நீங்கள் சொல்லிக் கொள்கிறீர்கள், ஆனால் அபிவிருத்தி என்பது நடந்ததாக தெரியவில்லை. கைதுகளும் அடக்குமுறைகளும் இந்த நாட்டிலே மிகக் கோலோச்சி மேலோங்கி இருக்கிறது-என்றார். (அ)

## புலிகள் அமைப்பை...

விடுதலைப் புலிகள் அமைப்பை ஊக்குவிக்கும் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. இருப்பினும் யுத்தத்தில் உயிரிழந்த உறவுகளை நினைவு கூருவதற்கான உரிமை காணப்படுகிறது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் பாடலுடன் தொடர்புடையதாகக் கைது செய்யப்பட்டுள்ள கிளிநொச்சி இளைஞர் தொடர்பில் பொலிஸ் மா அதிபர், சட்ட மா அதிபருடன் இன்று (நேற்று) கலந்துரையாடவுள்ளார். அதன் பின்னர் சாதகமான தீர்மானம் எடுக்கப்படும்-என்றார். (அ)

## சிறுவர்களின் 8 என்பு...

பொருளாக மீட்கப்பட்டுள்ளது.

அதேவேளை சிசுவின் என்புக்கூட்டு தொகுதி ஒன்று உட்பட 09 என்புக் கூட்டுத் தொகுதிகள் நேற்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

செம்மணி மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின் 20ஆம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அதன்போது ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்ட சிறுவர்களின் 08 என்புக் கூட்டுத் தொகுதி உட்பட 09 என்புத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மேலும் சிசுவின் என்புக் கூடு உட்பட 09 என்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றை சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

அதேவேளை நேற்றைய அகழ்வுப் பணியின்போது என்புக் கூடொன்றின் மீதிருந்து நாணயக் குற்றி ஒன்று மீட்கப்பட்டு, சான்றுப் பொருளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையி. செம்மணியில் இதுவரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற அகழ்வுப் பணிகளின்போது 327 மனித என்புக் கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில், 311 என்புக் கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மகாநாயக்கர்களை...

ஆகியோரைச் சந்தித்து நல்லாசி பெற்றார்.

இதன்போது பௌத்த சாசனம் தற்போது எதிர்நோக்கியுள்ள பல்வேறு சவால்கள் குறித்தும், அது தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் முன்னாள் ஜனாதிபதி மகாநாயக்க தேரர்களுடன் விரிவாகக் கலந்துரையாடினார்.

பௌத்த சாசனத்தின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக எடுக்கப்பட வேண்டிய சில முன்மொழிவுகளையும் முன்னாள் ஜனாதிபதி மகாநாயக்க தேரர்களிடம் சமர்ப்பித்தார் என மகா விகாரை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்போது, மல்வத்து பீடத்தின் மகாநாயக்க தேரர் முன்னாள் ஜனாதிபதிக்கு பெறுமதிமிக்க புத்தர் சிலை ஒன்றையும் பரிசளித்தார். (அ)

## ஜே.வி.பியினரின்...

புலிகளின் சித்தாந்தப் பாடல்களைப் பயன்படுத்தியிருந்ததாக ஊடகங்கள் அறிக்கை செய்திருந்ததை நினைவு கூர்ந்தார்.

அந்தப் பாடல்களைப் பகிர்ந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக இருக்கும் போது, கிளிநொச்சியில் ராப் பாடல் பாடிய இளைஞன் மட்டும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளமை அப்பட்டமான அரசியல் பழிவாங்கல் என்றும், இதற்குப் பொறுப்புக்கூற வேண்டியது யார் என்றும் அவர் சவால் விடுத்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகள் மற்றும் இராணுவத்தினர் தொடர்பான குற்றப் புலனாய்வு விசாரணைகளை அரசாங்கம் தங்களது அரசியல் மேடைத் தலைப்புகளாக மாற்றி அரசியலாக்கக் கூடாது எனவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்மையான நீதி வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## என்னைக் கைது...

ஊடகங்கள் வாயிலாக வதந்திகளைப் பரப்பி, ராஜபக்ஷக்களுக்கு முட்டுக்கொடுக்கும் நபர்கள் குறித்து குறிப்பிட்ட அவர், தனக்கு நேர்ந்த அரசியல் பழிவாங்கல்களின் பின்னணியில் இருந்த உண்மைத் தலைமைகளை அம்பலப்படுத்தியுள்ளார்.

தான் எவ்வித குற்றச்சாட்டுகளோ அல்லது முறையான நீதிமன்ற விசாரணைகளோ இன்றி, கடற்படைத் தலைமையகத்தில் சுமார் 8 மாதங்கள் தொடர்ச்சியாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என பொன்சேகா சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜன்னல்கள் மற்றும் கதவுகள் பலகைகளால் அடைக்கப்பட்ட ஒரு சிறிய அறையிலேயே தான் அடைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் அவர் விவரித்தார்.

சிறைச்சாலைகள் மற்றும் தடுப்புக்காவல் முகாம்களில் இருப்பவர்களின் அனுபவங்கள் என்ன என்பது குறித்த முழுமையான அறிவும் அனுபவமும் சாலேயுக்கு உண்டு எனக் குறிப்பிட்ட அவர், சாலே, கபில ஹெந்தவிதாரண போன்றவர்களின் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக்கொண்டே கோட்டாபய ராஜபக்ஷ என்னைச் சிறையில் அடைத்துப் பழிவாங்கினார் என்று குற்றம் சுமத்தியுள்ளார். (அ)

## மாகாண சபைத்...

ஒவ்வொரு நாளும் ஆதரவு மிக வேகமாகப் பெருகி வருகின்றது. குறிப்பாக, நாட்டின் கிராமிய மட்டங்களில் பொதுஜன பெரமுனவுக்குப் பேராதரவு கிடைத்துள்ளது என்பதை எங்களால் களத்தில் நேரடியாகக் காண முடிகிறது. எனவே, எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள அச்சப்படும் நிலையில் எங்களது கட்சி இல்லை.

அதனால்தான், இழுபறியில் உள்ள மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு தற்போதைய அரசுக்கு மிகவும் துணிச்சலாகவும், பகிரங்கமாகவும் நாங்கள் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருகின்றோம்.

அரசியல் இலாபங்களுக்காகக் கட்சி தாவும் மக்கள் பிரதிநிதிகளின் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளைப் பறிக்கக்கூடிய புதிய சட்ட மூலங்களுக்கு நாங்கள் ஒருபோதும் எதிரானவர்கள் அல்ல. சுயநல அரசியலைத் தடுக்கும் அத்தகைய சட்ட மூலங்களை பாராளுமன்றத்தில் நாங்கள் நிச்சயமாக முழுமையாக ஆதரிப்போம்-என்றார். (அ)

## தருமபுரத்தில்...

உயிரிழந்த இளைஞனின் சடலம் தருமபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## நாணய நிதிய...

பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்நாட்டு உற்பத்தியாளர்களாக இருந்தாலும் சரி, அல்லது முதலீட்டுச் சபையின் கீழ் இயங்கும் உற்பத்தியாளர்களாக இருந்தாலும் சரி, சர்வதேச சந்தையில் குறைந்த செலவில் போட்டியிடுவதற்கு தற்போதைய மின்சாரக் கட்டணமே மிகப்பெரிய தடையாக இருக்கிறது.

சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையில் "உற்பத்தி அமைப்பில் மாற்றம்" என ராஜதந்திர மொழியில் குறிப்பிடப்பட்டிருப்பது, மலிவான நிலக்கரி உற்பத்திக்கு பதிலாக அதிக செலவுடைய எரிபொருள் மூலமான மின் உற்பத்தியையே குறிக்கிறது.

இந்த உடன்படிக்கை நிபந்தனைகளை மாற்றி, தேசிய உற்பத்தியாளர்கள் வலுப்பெறும் வகையில் திருத்தங்களை மேற்கொள்ளுங்கள். விரைவில் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கான முறையான வேலைத்திட்டமொன்றை உருவாக்குமாறும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

# ஜே.வி.பியின் தேசியப் பட்டியல் வேட்பாளரின் தொழிலகத்திலேயே ஈஸ்டர் குண்டு தயாரிப்பு!

## கூறுகிறார் மகிந்தவின் சட்டத்தரணி மனோஜ் கமகே

கொழும்பு, ஜூன். 10

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புச் சம்பவத்தின் குண்டுகள் அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சாலேயினால் தயாரிக்கப்படவில்லை என்றும், அவை ஜே.வி.பி கட்சியின் தேசிய பட்டியல் வேட்பாளராக இருந்த இப்ராஹிமின் செப்புத் தொழிற்சாலையிலேயே தயாரிக்கப்பட்டன என்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பேச்சாளர், சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போது இதனை தெரிவித்த அவர், கத்தோலிக்க திருச்சபையின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினிக்கு பகிரங்க சவால் விடுத்து சில முக்கிய கேள்விகளை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்த பின்னர் இப்ராஹிமின் செம்புத் தொழிற்சாலையில் சந்தேகத்தின் பேரில் 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஆனால், இரண்டு வாரங்கள் முடிவடைவதற்குள் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அவர்களின் பிணைக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் விடுதலை செய்ய சம்மதித்தது.

இந்த பின்னணியில் சி.ஐ.டியில் உத்தரவிட்ட அதிகாரி யார் என்பதை அருட்தந்தை வெளிப்படுத்தவேண்டும்.

அத்துடன், மட்டக்களப்பு நீதிமன்றத்தில் பயங்கரவாதி சஹ்ரானுக்கு எதிராக வழக்கு நிலுவையில் இருந்தபோது, கொழும்பிலிருந்து தனது சொந்த வாகனத்தில் சஹ்ரானை மறைத்து, அனைத்து சோதனைச் சாவடிகளையும் தாண்டி நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்ற ஒரு சட்டத்தரணி உள்ளார்.

தற்போது ஜனாதிபதியின் ஆலோசகராகவும் இருக்கும் அந்த சட்டத்தரணியின் பெயரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு அருட்தந்தை சிறில் காமினி பகிரங்கப்படுத்த வேண்டும்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் நுவரெலியாவில் வைத்து சாரா ஜாஸ்மினைக் கைது செய்யச் சென்றபோது, சி.ஐ.டி. அதிகாரி ஒருவர் தொலைபேசியில் அழைத்து, "இது எங்களது விசாரணை, நீங்கள் தலையிடாமல் திரும்பிச் செல்லுங்கள்" எனக் கூறி தடுத்தார்.

அன்று சாரா ஜாஸ்மின் கைது செய்யப்பட்டிருந்தால் இந்தத் தாக்குதலே நடந்திருக்காது. அந்த சி.ஐ.டி. அதிகாரி யார்?

இதனிடையே, "நாளை காலை குண்டு வெடிக்கப் போகிறது" என சுரேஷ் சாலே தனது மேசைக்கு அனுப்பிய உத்தியோகபூர்வ புலனாய்வு அறிக்கைகளை அலட்சியம் செய்து புறக்கணித்த ஒரு அதிகாரி, தற்போதைய அரசாங்கத்திலும் பதவியில் உள்ளார்-என்றார்.

(அ)

# ஐந்தாவது நாளாகவும் தொடரும் போராட்டம்




யாழ்ப்பாணம், ஜூன். 10

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் சுகாதாரத் தொண்டர்கள், தமக்கு நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தி முன்னெடுத்து வரும் போராட்டம் நேற்று ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்தது.

போராட்டத்தின் ஒரு பகுதியாக, சுகாதாரத் தொண்டர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவும், கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சுக்கு முன்பாகவும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவும் வெற்றிடங்களுக்கு நடத்தப்படவுள்ள நேர்முகத் தேர்வுக்காக 92 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், கடந்த ஐந்து ஆண்டுகளாக தொண்டர்களாகப் பணியாற்றி வரும் தமக்கு முன்னுரிமை வழங்கப்பட்ட பின்னரே ஏனையோருக்கு வாய்ப்பு அளிக்கப்படவேண்டும் எனக் கோரி சுகாதாரத் தொண்டர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# பெற்றோரை கைவிடும் பிள்ளைகளின் சொத்துகளை மீள கைப்பற்றும் திட்டம்

கொழும்பு, ஜூன். 10

பெற்றோரின் சொத்துக்களை அனுபவித்துக் கொண்டு, அவர்களைக் கைவிட்டுச் செல்லும் பிள்ளைகளிடமிருந்து சொத்துக்களை மீள கைப்பற்றும் வகையில் புதிய ஒழுங்கு விதிகளை அறிமுகப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஆரம்பக்கட்ட கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ குறிப்பிட்டார்.

அதன்படி, பிள்ளைகளால் கைவிடப்படும் பெற்றோர்களை அரசு பொறுப்பேற்றுப் பராமரிக்கும் எனவும் அவர் கூறினார்.

எனினும், பெற்றோரின் சொத்துக்கள் பிள்ளைகளிடம் இருந்தால், அவற்றை அரசுடைமையாக்கும் வகையில் சட்டங்களை உருவாக்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்படுவதாகப் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

பெற்றோரின் சொத்துக்களைப் பெற்றுக் கொண்டு, அவர்களைக் கைவிடுவதென்பது, மிகக் கொடூரமான செயல் எனவும், அது, பெற்றோர்களின் உரிமைகளை மீறும் செயற்பாடு எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனாலேயே, கைவிடப்படும் பெற்றோர்களின், பிள்ளைகளிடமிருக்கும் சொத்துக்களை அரசுடைமையாக்கும் வகையில் புதிய திட்டங்களைக் கொண்டுவர தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# உணவகத் தீ விபத்தில் மூன்று பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன். 10

தலவத்துகொட சந்திக்கு அருகில் உள்ள உணவகம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மூவரும் உயிரிழந்துள்ளனர்.

இந்த தீ விபத்தில் மூவர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே மூவரும் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முற்பகல் குறித்த உணவகத்தில் தீ பரவியிருந்ததுடன், தீயைக் கட்டுப்படுத்துவதற்காக கோட்டே மாநகர சபைக்குச் சொந்தமான 3 தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. எரிவாயு கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பாக தலங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கொழும்பில் மோசமான நிலையில் 27 மாடிக் குடியிருப்புத் தொகுதிகள்!

கொழும்பு, ஜூன். 10

கொழும்பில் மோசமான நிலையில் 27 மாடிக்குடியிருப்பு தொகுதிகள் உள்ளதாக நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர் எரங்க குணசேகர தெரிவித்துள்ளார்.

மேலும், கொழும்பில் முன்னெடுக்கப்படும் மறுசீரமைப்பு வீடமைப்புத் திட்டம் இந்த வருட இறுதிக்குள் நிறைவு செய்யப்பட்டு மக்களுக்கு கையளிக்கப்படும் எனவும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் உள்ள குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கான வீட்டுத் திட்டங்கள் மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான விசேட விவாதமொன்று பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா எழுப்பிய கேள்விகளுக்கு, பதிலளித்தபோதே பிரதி அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, மஹரகம பகுதியில் சீன நிதியுதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத் தொகுதியில் மக்களைக் குடியேற்றுவதற்கான காலக்கெடு குறித்துக் கேள்வி எழுப்பினார். அங்கு குடியேற்றப்படவேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கையில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்ற உறுப்பினரின் கருத்துக்களுக்குப் பதிலளித்த நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர் எரங்க குணசேகர,

கொழும்பு மாவட்டத்தில் உள்ள 27 அடுக்குமாடி குடியிருப்புகள் தற்போது மக்கள் வாழ்வதற்குப் தகுதியற்ற நரகம்போன்ற சூழலாக மாறியுள்ளதை ஏற்றுக்கொண்டார்.

தற்போதைய அரசாங்கம் அந்த 27 வீட்டுத் தொகுதிகளையும் மறுசீரமைத்து, மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கான சூழலை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருவதாகக் குறிப்பிட்டார்.

மஹரகம பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ள தகுதியான குடும்பங்கள் அனைத்தும், இந்த வருட இறுதிக்குள் சீன நிதியுதவி வீட்டுத் தொகுதியில் மீள்குடியேற்றப்படுவார்கள்.

அத்துடன், இந்த வருடத்திற்குள் 2 அடுக்குமாடி குடியிருப்புகளும், அடுத்த இரண்டு வருடங்களுக்குள் மேலும் 11 அடுக்குமாடி குடியிருப்புகளும் முழுமையாக நிறைவு செய்யப்பட்டு, 7,000 இற்கும் அதிகமான மக்கள் குடியேற்றப்படவுள்ளனர்-என்றார்.

(அ)

# எரிபொருள் விலை மீண்டும் உயரலாம்!

## கெமுனு விஜேரத்ன எச்சரிக்கை



கொழும்பு, ஜூன். 10

உலகச் சந்தை நிலவரங்களுக்கு அமைய இந்த மாத இறுதியில் நாட்டில் மீண்டும் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட வாய்ப்புள்ளதாகத் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, ஜூலை மாதம் நடைமுறைக்கு வரவுள்ள வருடாந்த பஸ் கட்டணத் திருத்தத்தின் போது பஸ் கட்டணங்கள் 20 வீதம் வரையில் அதிகரிக்கக் கூடும் என்றும், குறைந்தபட்ச பஸ் கட்டணம் 35 ரூபாயைத் தாண்டுவது உறுதி என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோது இதனை தெரிவித்த அவர், பஸ் கட்டணத்தை உடனடியாக உயர்த்துவதற்கு அரசாங்கம் இணங்காததால், பஸ் உரிமையாளர்களின் நட்டத்தைக் குறைக்கும் நோக்கில் நாளாந்த பயணக் கட்டமைப்பு மாற்றியமைக்கப்படவுள்ளது.

இதன்படி, அலுவலக நேரங்கள் மற்றும் பாடசாலை நேரங்களிலான பஸ் சேவைகள் எவ்வித மாற்றமுமின்றி வழமை போல் தொடரும்.

எனினும், பயணிகள் நடமாட்டம் குறைவாகக் காணப்படும் இடைப்பட்ட நேரங்களிலான பயண வாரங்கள் குறைக்கப்படும்.

சீரற்ற காலநிலை மற்றும் வீதிகள் சேதமடைந்துள்ளமை காரணமாக நுவரெலியா மாவட்டத்தின் பூண்டுலோயா போன்ற பல பகுதிகளில் தற்போது பஸ் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், டீசல் தட்டுப்பாடு மற்றும் நட்டம் காரணமாக ஏற்கனவே 20 வீதம் முதல் 25 வீதம் வரையான தனியார் பஸ்கள் சேவைகளில் இருந்து தற்காலிகமாக விலகியுள்ளன.

பிரதான வீதிகளில் பஸ்கள் ஓடினாலும், கிராமப்புற வீதிகளிலேயே இந்தச் சேவை குறைப்பு அதிகமாகக் காணப்படும்.

இதனால் ஏழை மக்களே அதிகம் பாதிக்கப்படுவர். அவர்கள் மாற்று வழியான ஓட்டோவை பயன்படுத்த நேரிட்டால் ஒரு கிலோமீற்றருக்கு 150 முதல் 200 ரூபாய் வரை செலவிடவேண்டியிருக்கும்.

பஸ்களை முற்றாக நிறுத்திப் போராட்டத்தில் ஈடுபட முடியாது. அவ்வாறு நிறுத்தினால் பஸ் ஓட்டுநர்களும் நடத்துநர்களும் பணியை விட்டுச் சென்றுவிடுவர்.

பின்னர் மீண்டும் ஊழியர்களைத் திரட்டுவது மிகப்பெரிய சவாலாக மாறும்.

எனவே, ஊழியர்களைத் தக்கவைத்துக்கொண்டு நட்டத்தை ஈடு செய்யும் வகையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.